பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 59 நாள்: 30.04.2018

## சோழிங்கநல்லூர் மண்டலம், கோட்டம்–198ல் தற்காலிகமாக செயல்பட்டு வரும் நகர ஆரம்ப சுகாதார நிலையத்தை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் 50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர ஆரம்ப சுகாதார நிலையம் எனவும், 2,50,000 மக்கள் தொகைக்கு ஒரு மாநகர சமுதாய சுகாதார மையம் எனவும் செயல்படுத்தப்பட வேண்டும். இதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 140 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 15 மாநகர சமுதாய சுகாதார மையங்கள் என்று நிர்ணயம் செய்யப்பட்டு, தற்சமயம் 139 நகர ஆரம்ப சுகாதார நிலையங்களும், 14 மாநகர சமுதாய சுகாதார மையங்களும் வெற்றிகரமாக பெருநகர சென்னை மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது, 15ம் மண்டலமான சோழிங்கநல்லூர் மண்டலத்தில் உள்ள 198வது கோட்டத்தில் 140வது நகர ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டி முடிக்கப்படும் வரை, தற்காலிகமாக நெடுஞ்செழியன் சாலையில் அமைந்துள்ள துணை சுகாதார நிலையத்தில் (VHN Quarters) சோழிங்கநல்லூர் நகர ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்று வருகின்ற மருத்துவ சேவைகளை அரசு விடுமுறை நாட்களை தவிர மற்ற நாட்களில் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி